**கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம், இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக திட்டத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது திட்டத்தின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட:டு நியமம் இலக்கம் 07 இன் 04 ஆம் பந்திக்கு முரணாக முன்னைய ஆண்டு செம்மையாக்கல் ரூபா 98,000 கழித்தலும் மரண பணிக்கொடை நிதியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,746,720 பணம் சேர்த்துக்கொள்ளுதலும் செய்யப்பட வேண்டிய போதிலும் கழித்துக் காட்டுதலும் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 173,000 வெளிப்படுத்தல் செய்யாமையும் செலுத்த வேண்டிய மரண பணிக்கொடை மீதியின் வித்தியாசமான ரூபா 8,000 தொகை தொழிற்படு மூலதன மாற்றங்களில் சேர்த்தல்களாக உள்ளடக்கப்பட்டமையும் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளானது ரூபா 3,410,440 ஆல் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மரண | முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கலலாக ரூபா 98,000 பணம் இந்த ஆண்டின் போது சரிசெய்தல் மேற்கொள்ளப்பட்டதனால் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிக்கொடை நிதிய கணக்கின் மீதியின் வித்தியாசம் மற்றும் ஒதுக்கீடுகளின் மொத்தமான ரூபா 3,410,440 தொகை முதலீட்டு செயற்பாடுகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக முதலீடுகளின் காசுப் பாய்ச்சல் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 5,532,349,026 தொகையான ஓய்வூதிய பொறுப்பிற்காக காப்பீட்டு கணிப்பு மதிப்பீடானது 2007 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏனைய சமூக பாதுகாப்புத் திட்டங்களுடன் இழப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது 2024 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | நியமத்தின் பிரகாரம் இழப்பீட்டுக் கணிப்பு மதிப்பீடானது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஓய்வூதிய பொறுப்பு ரூபா 5,532,349,026 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான முதலீட்டுப் பெறுமதி ரூபா 793,308,692 ஆக இருந்ததனால் இக்கடப்பாட்டினைத் தீர்த்துவைப்பதற்கு போதிய முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | ஓய்வூதிய பொறுப்பினைத் தீர்த்தவைப்பதற்கு போதியளவு முதலீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் ஆளணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் உரிய செயற்பாட்டிற்கு நேரடியாக தொடர்புபடாத இரண்டு உத்தியோகத்தர்களுக்கு செலுத்திய ரூபா 1,332,218 மொத்த தொகையான சம்பளம் செலவாக கணக்கீடு | திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சேர்த்தக்கொள்ளப்பட்டுள்ள இந்த உத்தியோகத்தர்கள் தற்பொழுது ஏனைய கடமைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். திட்டத்தின் கடமைகள் சுழற்சி முறையில் ஏனைய உத்தியோகத்தர்களாலும் மேற்கொள்ளப்படுவதனால் இந்த உத்தியோகத்ரத்களின் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் ஆளணியினரை அங்கீகரித்து சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. | சம்பளம் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் தொடர்ச்சியாக மறைப்பெறுமதியினைக் கொண்டிருந்ததன் அடிப்படையில் திட்டத்தின் முழுச் சொத்துக்களும் தேறப்படாததனால் முழுப் பொறுப்புக்களையும் தீர்த்துவைப்பதற்கு முடியாததன் அடிப்படையில் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது சச்சரவான விடயமாகும். | இத்திட்டம் சுயநிதி அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படாததுடன் தவணைப் பணத்தினை தீர்மானிக்கும் போது அரசாங்க நிவாரணத்திற்கு உள்வாங்கப்படுவதனால் இந்த நிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க வருடாந்தம் செலுத்த வேண்டிய ஓய்வூதிய பொறுப்பு அதிகரிக்கச் செய்வதுடன் அதனால் தேறிய சொத்துக்களின் பெறுமதியும் குறைவடைகின்றது. அக்காரணத்தினால் இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளல் அபிவிருத்தி செய்யப்படவில்லை. | திட்டத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் தொடர்ச்சியாக மறைப் பெறுமதியாகுவதனைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) **1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம்** | | | |
| (i) 5 (1) ஆம் பிரிவு | 18 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட ஒரு கடற்றொழிலாளருக்கு இந்த கடற்றொழில் ஓய்வூதியத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தகமை இருந்தும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு அங்கத்தவரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. | திட்டத்திற்கு கடற்றொழிலாளர்களை கவரச்செய்வதற்காக 2024 ஆம் ஆண்டின் போது கடற்றொழில் அமைச்சுடன் ஒன்றிணைந்து புதிய ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திட்டத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு புதிய அங்கத்தவர்கள் சேரத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) 7 ஆம் பிரிவு | திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற பங்களிப்பாளர்களுக்கு 60 வயதினைப் பூரணப்படுத்துகையில் ஓய்வூதியம் | 60 வயது பூர்த்தியடைந்த பங்களிப்பாளர்களின் பட்டியல் மாவட்ட அலுவலகங்களுக்கு இணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் | திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற பங்களிப்பாளர்களுக்கு 60 வயதினைப் பூர்த்திசெய்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட வேண்டிய போதிலும் 2007 சனவரியிலிருந்து 2016 திசெம்பர் வரையான காலத்திற்காக ஓய்வூதியம் வழங்கிய 139 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 4,159,063 தொகை மற்றும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது ஓய்வூதியம் வழங்கிய 45 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 1,378,518 ஆக மொத்தமாக ரூபா 5,537,581 நிலுவையான ஓய்வூதியமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அப்பட்டியலினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியத்திற்கு தகமையுள்ள கடற்றொழிலாளர்களுக்குத் தெரியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிய செயற்பாட்டு நடவடிக்கைகளானது கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் இந்நிலைமையானது இத்திணைக்களத்திற்கும் தெரியப்படுத்துவதற்கு மேலதிகமாக பத்திரிகை அறிவித்தலின் மூலம் கடற்றொழிலாளர்களுக்கும் தெரியப்படுத்தப்படுகின்றது. தாமதமாக கிடைத்துள்ள விண்ணப்பங்களானது தாமதத்திற்கான காரணத்தை தெரியப்படுத்தும் வரை நிலுவை ஓய்வூதிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதிலலை. தற்பொழுது நிலுவை ஓய்வூதியத்துடன் ஓய்வூதிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | யில் ஓய்வூதியத்தினை வழங்கும் வேலைத்திட்டத்தினை தயாரித்தல் வேண்டும். |
| (iii) | 16 ஆம் பிரிவு | தொடரராக பத்து தவணைப் பணங்களுக்கு முறைப்படியாக பணத்தை செலுத்தாதன் அடிப்படையில் பங்களிப்பாளர்கள் பிரதி பலன்களை இழப்பது சம்பந்தமாக பங்களிப்பாளர்களுக்கு தெரிவித்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பங்களிப்பு பணத்தை சேகரித்தல் மற்றும் அறிக்கையிடுதல் நடைமுறை இல்லாததனால் தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்படவில்லை. | தொடர்ச்சியாக பத்து தவணைப் பணங்களுக்கான பங்களிப்பு பணத்தை முறைப்படியாக செலுத்தாதன் அடிப்படையில் ஒரு பங்களிப்பாளர் பிரதிபலன்களை இழப்பது தொடர்பாக ஓய்வூதியத்திற்கு பங்களிப்பு செய்யும் போது வழங்கப்படுகின்ற ''ஓய்வூதிய உறுதிப்பத்திரத்தில்'' தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பங்களிப்பாளர் பங்களிப்பினை இரத்துச்செய்த நபரா என்பதனை ஆராய்ந்து பார்த்து தவணைப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக பங்களிப்பாளரின் தவணைப் பணத்தினை அறவீடு செய்கின்ற மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தருக்கு தேவையான ஆலோசனைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை | ஒரு பங்களிப்பாளருக்கு பிரதிபலன் இழப்படுவது சம்பந்தமாக பங்களிப்பாளருக்கு தெரியப்டுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கப்படும். | |
| (iv) | 20 ஆம் பிரிவு | திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஆலோசனைக் குழு 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் இன்று வரை கூடியிருக்கவில்லை. | கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்தின் புதிய ஆட்சேர்ப்பினை 2024 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் கடற்றொழிலாளர் ஓய்வூதிய ஆலோசனைக் குழுவினை இந்த ஆண்டில் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடற்றொழில் ஓய்வூதிய ஆலோசனைக் குழு கூட்டப்படுதல் வேண்டும் |
| (ஆ) | 2023 சனவரி 27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 02(இ)(iii)ஆம் பந்தி | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரித்த ஆளணி நடைமுறை இல்லாது 04 உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய பிரிவில் பதில் கடமை படியாக ரூபா 557,736 செலுத்தப்பட்டிருந்தது. | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு கடற்றொழில் அமைச்சின் கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்தில் மேலதிக வேலைப்பகுதி ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்தின் கடமைகளுக்காக தனியான ஆளணியினர் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த வேலைகளை நிறைவேற்றுவதற்காக இப்படிகள் செலுத்தப்படுகின்றன. தேவையான பணம் கடற்றொழில் அமைச்சிடமிருந்து சபைக்கு வழங்கப்படுகின்றது. அது கடற்றொழில் ஓய்வூதியம் ஆரம்பித்த 1991 ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்பட்டது. இக்கொடுப்பனவிற்காக கடற்றொழில் ஓய்வூதிய ஆலோசனைக் குழுவின் பணிப்பாளர்கள் சபையின் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் இராஜாங்க செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த ஆளணி நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 425,104,832 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 406,060,646 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 19,044,186 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டிற்கான ஓய்வூதிய பொறுப்பு முன்னைய ஆண்டினைவிட ரூபா 40,412,125 இனால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலிலாளர்களின் எண்ணிக்கை 64,117 ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் பின்னர் எந்த அங்கத்தவரும் சேரத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கடற்றொழிலாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 வயதினை மிகைத்து ஓய்வூதிய வயதிற்கு வந்துள்ள 31,146 கடற்றொழில் பங்களிப்பாளர்களில் 24,187 பங்களிப்பாளர்களுக்கு (ஒரே தடவையில் பங்களிப்பு பணத்தை செலுத்தி பங்களிப்பினை பெற்றுக்கொண்ட 5,549 பங்களிப்பாளர்களையும் உள்ளடக்கி) கடற்றொழில் ஓய்வூதிய பிரதிபலன்கள் வழங்கப்படவில்லை. | 60 வஙதினைப் பூர்த்தி செய்த பங்களிப்பாளர்களின் பட்டியல் மாவட்ட அலுவலகத்தின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு கடற்றொழிலாளர்களுக்கு தெரியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பத்திரிகைகளின் மூலம் கடற்றொழிலாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திட்டத்திற்குரிய செயற்பாட்டு நடவடிக்கைகள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மூலம் இடம்பெறுவதனால் இந்நிலைமையினை அத்திணைகக்களத்திற்கு தெரியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | 60 வயதினைப் பூர்த்தியடைகையில் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |